உ

சிவமயம்



நெல்லண்டை

# இத்தி மாமர நிழல் ஆச்சி

# 2013

நேர்த்தி வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

V.S. SRISKANTHARAJAH
ESTIMATOR
CIVIL ENGINEERING
N.D.T (CIVIL). SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# நெல்லண்டை
# இத்தி மாமர நிழல் ஆச்சி
# 2013

## நேர்த்தி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகார்த்த சமர்ப்பணம்

தாயார் :

அமரர்

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம்

மகன் :

அமரர்

திரு. ஸ்ரீஸ்கந்தராசா ஸ்ரீகஜேந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

நின்றாலு மிருந்தாலுங் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலும் மிமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

The Gita is Convention ally regarded along with the upanishads and the Brahma sutra as an exposition on the Vedantic brand of Hindu Thought.

எவனொருவன் உறுதியாக சுவதர்மத்தில் நிலைத்து நின்று நடுநிலையில் வாழ்ந்து வருகிறானோ அவனது வாழ்க்கைப் பயணம் ஆரம்பத்தில் கரடுமுரடானது ஆக தோன்றினாலும் அவன் தர்மத்தில் வாழ்கின்றான். என்பதுடன் இம்மையிலும் மறுமையிலும் பூரண இன்பம் பெறுகிறான். சுவதர்மத்தினை அறிந்தவன் எச் சோதனைகள் வரினும், இலக்கினை மறவாது இருந்தவரின் வெற்றி நிச்சயம். காரியத்தை ஆற்றி விட்டு, பலனை எதிர்பாராது வாழும் ஒருவன் மட்டுமே வெல்ல முடியும்.

"Arisel Awake! Stop not till your goal is reacheel" என சுவாமி விவேகானந்தர் இயம்பினார்.

''எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும் பிணங்கேன்"
- அபிராமி அந்தாதி 81 -

மாதா, பிதா, குரு, தெய்வம்
எது நடந்ததோ, நடக்கிறதோ, நடக்குமோ
என்பது உலக நியதி.

Past Never Returus.

எனவே, கலையாத கல்வியுடன், சலியாத மனத்துடன், தொலையாத நிதியுடன், வாடாமல் உயிரெனும் பயிர் தழைத்தோங்கி வர, அருள் மழை பொழியும் நெல்லண்டை ஆச்சியின் மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Utterance ot Nellandai
Amman\s Name is to
Make ~~Mate~~ the mind ultimately
Still, free from all thoughts.

ஆராயிருந்தாலும் அவரவர்க்கு தக்கவருள்
சீராகச் செய்திடும் நெல்லண்டை நினைவிருக்கையில்
வாராத செல்வமெல்லாம் வந்து குவிந்திடுமே
ஆராத காதலுடன் அவளடி தினம் பணிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபடு உரை

எமது இந்து சமய வழிபடு முறைமை, மனம் வாக்கு-காயம் எனும் மூவகை மூலகங்கள் மூலம் பேணப்படுகின்றது. செயலாற்று முறையில் இருவகைகளாகப் பாகுபடுத்தலாம்.

1. ஆகம நெறிக்குட்பட்ட கோயில்கள், விழாக்கள், சடங்குகள் இது பெருநெறி எனப்படும்.
2. ஆகம நெறிக்கு உட்படாது பேணப்படுபவை. இது சிறுநெறி எனப்படும்.

சிறுநெறியே கிராமிய தெய்வ வழிபாடு, குறிப்பிட்ட கிராம வரலாறு, பராம்பரியங்கள், மரபுகள் சார்ந்த தெய்வங்கள், சடங்குகள், உள்ளடக்கம்.

அம்மன், காளி, மாரி, வைரவர், ஐயனார் வழிபாட்டுக்கு வைக்கப்படும். இத்தகைய ஆலயங்கள், மரநிழல், ஆற்றங்கரை, குளக்கரை, மலையடிவாரம் ஆகிய இயற்கைச் சூழலில் அமைந்திருக்கும்.

காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி என அன்னை பராசக்தி காட்சியளித்து அருள் பாலிக்கின்றாள். மதுரையில் குயிலாகவும், இமயத்தில் மயிலாகவும், சிதம்பரத்தில் ஞான சூரிய ஒளியாகவும், திருவாரூரில் அன்னமாகவும் அம்பிகை விளங்குகிறாள் என்பது வழக்கு.

பக்திப் பெருக்கில் நம்மை மறக்க இதோ அபிராமி அந்தாதி பாடல் - 99

குயிலாய் இருக்கும் கடம்பா
டவியிடைக் கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயா
சலத்திடை வந்துதித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலாய் இருக்கும் விசும்பில்
கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யாருக்கு அன்று இமவான்
அளித்த கனங்குழையே.

கடம்பவனம் - மதுரை
விண் - சிதம்பரம்
தாமரை - திருவாரூர்

உலக தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் சிவனுக்குத் துணைவியாக நின்று செயற்படுவதால், அம்மன் வழிபாடு சிறப்புப் பெறுகின்றது.

இலங்கையில் மிகப் பழங்காலந்தொட்டு அம்மன் வழிபாடு நிலவி வருகின்றது. வடமராடசியில், நெல்லண்டை பத்திரகாளி அம்மன், பருத்தித்துறை நகர பத்திரகாளி அம்மன், பருத்தித்துறை சாமுண்டேஸ்வரி(கோட்டு வாசல் அம்மன்), வாணர் குடியிருப்பு முத்துமாரி அம்மன், தும்பளை முத்துமாரி அம்மன், அல்வாய் முத்துமாரி அம்மன், வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் என விரிவடையும். அம்பாறை மாவட்ட காரைதீவு அம்மன், மட்டக்களப்பு பாண்டிருப்பு அம்மன், திருகோணமலை பத்திரகாளி அம்மன், சிலாப மாவட்ட உடப்பு திரௌபதையம்மன் என விரிவடையும். மலையகத்தில் அநேகமாக முத்துமாரி அம்மன் ஆலயங்கள் அடக்கம். நாவலப்பிட்டி முத்துமாரி அம்மன், மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயங்கள் பிரசித்தம். வன்னியில் முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் சிறப்பு. அடுத்து நயினாதீவு நாகபூஷணி அம்மன் பிரசித்தம்.

அம்மன் வழிபாட்டுமுறைகள், விளக்கு வைத்தல், வழந்து கட்டல், வெளிமடை, மடைப்பண்டமெடுத்தல், வளந்து நேர்தல், பொங்கல், தீக்குளித்தல், காவடி, கரக ஆட்டம், வேல் பாய்ச்சி (செடில் குத்தி), காவடி பாலாவிஷேகம் என்ற ஒழுங்கில் நடைபெறும். உரிய கிராமங்களில் அம்மன் சடங்கு ஆரம்பத்துடன், ஊரவர் பயபக்தியுடன் இருப்பர். சமய ஆசாரம் பேணி, வெளியூர் பயணங்கள் தவிர்த்து, பாரம்பரிய பழக்க வழக்கங்களில் ஈடுபாடு கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்லண்டை அம்மன் தல மகிமை

**ஆதி நெல்லண்டை வீரகத்திப் பிள்ளையார் - காப்பு**

1. வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்.

2. வெற்றி முகத்து வேலவனைத் தொழப்
புத்தி மிகுந்து வரும்.

3. வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி யோடுந் தொடர்ந்த வினைகளே.

4. அப்ப முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினையறுமே.

மூலவிருட்சமாகவுள்ள மாமரநிழலில் ஆதி வீரகத்திப் பிள்ளையார் கிழக்கு முகமாக வீற்றிருந்து பல நூற்றாண்டு காலமாக அருள் பாலித்து வருகின்றார்.

தென் இந்தியா புண்ணிய பூமி வேதாரண்ணியத்திலிருந்து, யாத்திரையாக இவருடன் வந்து சேர்ந்தமை ஐதீகம். அங்கு அவரின் குருவினால், வழங்கப்பட்ட பத்திரகாளி சின்னத்தை நெல்லண்டை மாமர நிழலில் வல்லிபுர ஆழ்வார் சந்நிதியை நோக்கி வைத்துவிட்டு இளைப்பாறினார். பின்னர், தூக்கும் போது எடுக்க முடியாமல் அவ்விடத்திலேயே உரிய பூசனைகளை ஆற்றி வந்துள்ளார். அயலிலுள்ள தும்பளை கிழக்கு, நெல்லண்டை குறிச்சி, விஸ்வகுல மக்கள் உரிய பேராதரவு சித்தருக்கு கிடைக்கப் பெற்றது. நினைவுச் சின்னமாக, சித்தரின் உருவம், பிரபல வர்த்தகர் (நீலரவளவு) திரு.வ. இராமலிங்கம் அவர்களினால் நிர்மாணிக்கப்பெற்ற மணிக்கோபுர உச்சியில் காட்சியளிப்பது அவதானிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை முனையாம் பருத்தித்துறை நகரின் நெல்லண்டை வட்டாரத்தில் வடமுனை நோக்கி இத்தி மாமர நிழலில், சிவசக்தி வடிவாய் அமைந்து (வீரபத்திரர் சம்மேத பத்திரகாளி) அருளாட்சி புரியும் நெல்லண்டை பத்திரகாளி அம்மனின் மகத்துவமும், மகிமையும் அளவிடற்கரியது.

''தன்னிலைமை மன்னுயிர்கள் சார தருஞ்சக்தி
வல்லிபுரனார் கண்பார்த்து மாமர நிழலில் சிம்மாசனம்
துல்லியமான வினை தீர்க்க கல்லாவில் உன் தரிசனமே
அனந்த சயன மாயவனின் தங்கையே''

''மாபச்சை மால் துணைவியே'' இன்றும் ஆகம முறைப்படி, அனந்த சயனமாக விஷ்ணு மூர்த்தி, வடமுனை நோக்கி, மேற்குப்பக்க சுற்று மண்டபத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

''சேற்றில் புதையும் மதகரிபோல்
தீய ஆசைக் கடலிடையே
சிக்கி உய்யும் நெறியின்றித்
திணறும் அடியேன் மனமயக்கம்
மாற்றும் இமயமலைபயந்த
மருந்தே வருக பனை வளம் சேர்
வளமார் நெல்லண்டைப் பதி அமரும்
வாழ்வே வருக வருகவே''

இறைவன் யோகமூர்த்தியாகவும், போக மூர்த்தியாகவும் உள்ளான். அம்மை அப்பர், கல்யாண சுந்தரர், அர்த்தநாரீஸ்வரர் போன்றவை போகவடிவங்களாகும். இறைவன் யோக மூர்த்தியாக மட்டும் இருந்தால் உலகமே யோக நிலையில் நின்று வீடுபேறு பெறுவர். உயிர் விருத்தி நிகழாது.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.'' குறள் 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He, Who on earth has lived in the conjugal state as he shouted live, will be placed among the Gods who dwell in heaven.
(Conjugal state - marriage state எனவே நெல்லண்டை அம்மனும் சிவசக்தி ரூபத்தில் அருள்பாலிப்பது கண்கூடு.

இல்லறத்தை நல்லறமாய் சமய வாழ்வோடு இணைத்த சமயம் சைவசமயம் சிவசக்தி வடிவம் ''சக்தி இன்றேல் சிவமில்லை", சிவமின்றேல் சக்தியில்லை" என்ற தத்துவத்தை விளக்குகின்றது.

''ஆதியில் உலகமெல்லாம் அளித்திடும் அன்னை தன்னைக்
காதலின் வதுவைசெய்யக் கருதினர் கணித நூலோர்
ஓது பங்குனியின் திங்கள் உத்தரம் இன்றே யாரும்
ஈதுநன் மூர்த்தம் எந்தாய் இமயமேல் வருதி என்றான்"

எனக் கந்தபுராணம் சிறப்பிக்கின்றது. எனவே சிவசக்தி வடிவுடன், அன்னையின் அருளால் சகல நலன்களும், நிறைந்த இனிய நல்வாழ்வு அமையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

ஆணவமலப் பிடிப்பு இன்றேல், ஆன்மாக்களுக்கு பிறவித்துன்பம் இல்லை. ஆணவமலம் ஆன்மாக்களை இடையில் வந்து சேராது அநாதியே பற்றி நிற்கும் ஒன்றே ஆன்மாக்கள் அளிக்கப்படுகின்ற தனு,கரண, புவன, போகங்களை அனுபவித்து அதன் பேறாய் ஞான ஒளியைப் பெறாவிடின் ஆணவம் ஒருபோதும் அவைகளை விட்டு நீங்காது.

''பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவில்லாப் பெம்மானே

என சிவபுராணம் குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், கௌரி காப்பில்

முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவிட
ஞானங் கிளர்ந்து வர வல்லருளை செய்திடுவாய்

எனக் காளியாய் - கௌரியாய் வந்தமர்ந்த ஞான தானத்தை சிறப்பிக்கின்றது.

ஆணவம், கன்மம், மாயையை போக்கி இறையருள் காட்டும் வரலாறே கந்தபுராணம்.

நெல்லண்டை அம்மன் மூலக் கற்பகம் அமைந்த இயற்கைச் சூழல் மாமர நிழல்

இத்திமர நிழல் குடமுழுக்கு

கந்தபுராணத்தில் மாமரம் ஆணவ தகனம். தெட்சணா மூர்த்தி கல்லாலில் (இத்திமரம்) அமர்ந்தே சின்முத்திரை காட்டி ஞானம் போதித்தார். இத்திமரம் ஞான தானம் எனவே நெல்லண்டை அம்மன் சிவசக்தி உருவில் ஆணவ தகனம் ஞானதானமாக இயற்கை விருட்சங்களுடன் அடக்கம்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தற்குக்
கற்றனைத்தூறும் அறிவு. குறள் 396

Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug, and knowledge will flow from a man in proportion to the learning. Spirutua of subject is vast but the time is limited.

''போன நாட் செய்தவை மண்ணிற்
பிறந்தார்க்கு வைத்த பொருள்''

''செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்தவருமோ இரு நிதியம்''

என ஔவைப் பிராட்டி கூறியமை சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களின் தாக்கங்களினால் உழலும் நாம், ஆணவ மலத்தின் பிடியினின்றும் விடுபடுவதற்குத் திருவருளையே நாடி, அதன் வழியிற் சென்று, அதன் துணையை இறுகப்பற்றுவோமானால் சிவசக்தி அருளால் ஞானஒளி தோன்றப் பெற்று அறிவு விளக்கம் பெறுவதுடன் பேரின்பப் பெருவாழ்வையும் பெற எல்லாம் வல்ல நெல்லண்டை இத்தி மர நிழல் ஆச்சி போற்றி உய்வோமாக.

## பொது

1. Utterance of Nellandai Amman's Name is to make the mind Ultimately still, free from all thoughts.

2. ''ஆதியை மறந்தோருக்கு நடுவும் அந்தமும் சிக்கல்
பாதியை நினைந்தோருக்கு என்றும் அருட்புனலே''

3. ''சக்தியின் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்''
- சிவஞானசித்தியார் வாக்கு -

4. ''வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்கு
தாயும் மகளும் தாரமும் ஆகும்''
-திருமந்திரம்-

5. காதலாகிக் கசிந்து கண்ணீர்
மல்கி நெல்லண்டை இத்தி மாமர
நிழல் ஆச்சியை வணங்கி,
வாழ்த்தி உய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயகலைகள் வளரும் பூமி

தும்பளைக் கிராமம், வங்காளவிரிகுடாக்கடலும் பாக்கு நீரிணையும் இணையும் பனை முனையில் பனை வளமும், தென்னை, மா வளமும் அடக்கம்.

தெய்வீகப் பூமி - நெல்லண்டை கலைப்பூமி; கலை வளர்த்த பூமி; கலைவளரும் பூமி; கிராம ஆதி அண்ணாவிமார் நேர்த்தியிட்டு நாட்டுக் கூத்துக்கள் நிகழ்த்தி மகிழ்ந்த பூமி; வடமராட்சியின் கலை வளர் பூமி.

காத்தவராயன், மார்கண்டேயர், சம்பூர்ண இராமாயணம், சம்பூர்ண அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி ஆகிய கிராமியக் கூத்துகள் என்றும் நெஞ்சில் நினைவுறுத்தும் பச்சை மாலுடன் அமர்ந்து கூத்துப் பார்ப்பதாக ஐதீகம். இன்றும் மேற்குப் பக்கம் ஜன்னல் உள்ளதை அவதானிக்கலாம்.

"ஆராயிருந்தாலும் அவரவர்க்கு தக்கவருள்
சீராகச் செய்திடும் நெல்லண்டை நினைவிருக்கையில்
வாராத செல்வமெல்லாம் வந்து குவிந்திடுமே
ஆராத காதலுடன் அவளடி தினம் பணிவோம்."

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒரு போதும் இருந்தறியேன்.

மழலை விளையாடிய இடம்; ஏடெடுத்து கல்வி ஆரம்பித்த இடம்; எங்கிருந்தாலும் நோக்கி வணங்கும் இடம்.

அம்மா! தாயே! உன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிமடை

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் ''வெளிமடை'' பிரதி வருடமும் சித்திரா பூரணையின் பின் வரும் அமாவாசைத் தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை வரும்.

வெளிமடை வெள்ளிக்கு முன் வெள்ளியில் ''விளக்கு வைத்தல்'' சடங்கு நடைபெறும். வெளி மடையை அடுத்துவரும் வெள்ளி ''எட்டாம்மடை'' நடைபெறும்.

''ஐயன் அளந்த படியிரு
நாழிகொண்டு அண்டம் எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும்
போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை
யுங்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது
வோ உன்றன் மெய்யருளே.

\- அபிராமி அந்தாதி 57

குறிப்பு :- ''ஐயன் அளந்த படியிருநாழி'' என்பது காஞ்சியில் ஏகாம்பரநாதன் நெல்லளந்ததைக் குறித்தது. அதனைப் பெற்ற அபிராமி, காத்தலைச் செய்யும் காமாட்சியாகி, முப்பத்திரண்டு அறங்களையும் புரிந்து உலகைப் புரந்தனள் என்பது வழக்கு.

வெளிமடை வெள்ளி, தும்பளை கிராமத்திற்கு முதல் நாள்.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ நானிலும் நனிசிறந்தனவே''

தும்பளையில் பிறந்தோர், வசிப்பிடமாகக் கொண்டோர், திருமண உறவில் புலோலி, புற்றளை, காரக்கலட்டி, ஆத்தியடி, தம்பசிட்டி ஆகிய ஊர்களுக்கு புகுந்த வீட்டோர், பாரம்பரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்கள் (பொலிகண்டி கந்தவனம் வரை, கற்கோவளம் வரை) வெளிநாட்டிற்கு புலம் பெயர்ந்தோர், தொழில் நிமிர்த்தம் வெளியூர் சென்றோர் யாவரும் ஒன்று கூடி, பல்லோரும் ஏத்தப்பணிந்து வெளிமடைத் தாய் தரிசனம் பெறும் காட்சி சிறப்பானது.

Known, Unknown அடியார்கள் நேர்த்திக்கடன்கள் அளவிடற்கரியது.

ஆகமமுறைப்படி, உள்மண்டப பூசைகள் (பெருநெறி) மேற்குப்பக்க முற்றத்தில் வெளிமடைப் பூசைகள் (சிறு நெறி) விசேடம்.

முப்பத்திரண்டு அறங்கள் குறித்திட 32 பொங்கல். காய்மடை, பூமடை, பழமடை அடக்கமாக நேர்த்தி ஆட்டுக் கடாக்கள், கோழிகள் இருக்கும். வெளிமடை வெள்ளி இரவு, பொலிகண்டி கந்தவனம் தொட்டு, வடமராட்சி பரவலான அடியார்கள் காவடி, வேல்பாய்ச்சி, பாலாவிஷேகம் சேர, கரகாட்டம் ஆகியன நடைபெறும். மறுநாட் காலை சனிக்கிழமை வெளிமடைப் பூசைகள் பக்தி பூர்வமாக நடைபெறும்.

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி திரியம்பகி எழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதன
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ

ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடி ஈன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென் மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரணியும் இருகொங்கை மாதர் மகிழ் கங்கை புகழ்
வளமருவு தேவை அரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்கா தலிப்பெண் உமையே.

- மலை வளர் காதலி தாயுமானவர்-

## அபிராமி அந்தாதி

வான் பொய்ப்பினும் தான் பொய்யாத் தன்மையது காவிரிப்பூம்புனல். அது அலங்கரித்து வளமூட்டும் தஞ்சைத் தரணியில் அருள் நலம் கமழத் திகழ்வது திருக்கடவூர்.

அபிராமிப்பட்டர், திருக்கடவூர் அபிராமி அம்பிகையை அகத்தில் நினைந்து, நினைந்து கண்ட ஆனந்தத்திற்கும் நற்பேறு பெற்றவர், அதனால் புற உலகை மறந்தவர். அமாவாசையில் அம்பிகையின் திருச்செவித்தோட்டின் நிலவொளியைக் கண்டு, யாவரும் வியந்த பிழைத்தோரையும், வேண்டினால் காத்தலைச் செய்பவள் அபிராமி!

திருக்கடவூர் அன்னை அபிராமி, உமாதேவியின் மற்றோர் வடிவம்; திருவருள் மிக்க வடிவம் பிரதி தை அமாவாசை நாளில் நெல்லண்டை அம்மன் வாசலில், அபிராமி பட்டர் விழா, அபிராமி அந்தாதி பாடல்களுடன் சிறப்புற நடைபெற்று வருகின்றது. நீலர் வளவு சார்ந்த ஆதி நெல்லண்டை அம்மன் பூசகரின் பூட்டியான; அபிராமி அகம் - திருமதி ஞானனேஸ்வரி முருகையா குடும்பம் உபயம்.

''உதிக்கின்ற செங்கதிர்'' என வருவது அவர் பாடிய முதற்பாட்டு விழிக்கே அருளுண்டு'' என எழுபத்தொன்பதாவது பாடல் பாடியதும், அம்மையின் ''தாடங்கம் என்ற திருச் செவித்தோட்டின் திருவொளியில் உலகே மூழ்கிப் பேரானந்தம் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகர உயிர் போல் அறிவாகி எங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து"

-திருவருட்பயன்-

சைவசித்தாந்தம் கடவுளுக்குச் சொரூப நிலை, தடத்தநிலை, என இரு நிலைகளைக் குறிப்பிடும்.

சொரூப நிலை - எல்லாம் கடந்த குணங்குறிகள் அற்ற நிலை.
தடத்த நிலை - உருவம், நாமம், குணங்குறி தொழில்களோடு ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் நிலை.

"எங்கும் எவையும் எரியுறுநீர் போல் ஏகம்
தங்குமவன் தானே தனி"

-திருமூலர்-

அபிராமியை வணங்கி, அபிராமி அந்தாதி பாடிப் பெரும் பயன்கள் பெற்று உய்வோமாக.

## நவராத்திரி விஜயதசமி கிராம சுற்றுலா

பிரதி நவராத்திரி நாட்கள், இறுதி விஜய தசமியன்று காலை, கிராம சிறுவர், சிறுமியருக்கு ஏடெடுத்து, கல்வி வித்தியாரம்பம் நடைபெறும். அன்று மாலை, சிங்க வாகினியாக, மகிடாசூர வதம்.

ஆலய, கிழக்குமுக வீதியிலிருந்து, நெல்லண்டை குறிச்சி வீதி, விஸ்வகுல வீதி, நீலர்வளவு, சந்துசீமா சந்தி, மலாம்பழ வீதி, ஊடாக தும்பளை முத்துமாரி கோயில் முன்றலில் கன்னி வாழை வெட்டுதலுடன் மகிடாசூரவதம் நிறைவடையும்.

பின்னர் தும்பளை இளைஞர் வரவேற்புடன் இனிதே அம்பாள் ஆலயம் சென்றிடும் நிகழ்வும் சிறப்புறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரந்தெழுந்த சமண் முதலாம்
பரசமய இருள் நீங்கச்
சிரந்தழுவு சைவ நெறித்
திருநீற்றின் ஒளி விளங்க
அரந்தை கெடப் புகலியர் கோன்
அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம
சுந்தரிபூங் கழல் போற்றி.

- உமாபதி சிவாச்சாரியார்-

## கந்தபுராண படனும் கந்தசஷ்டி - சூரசங்காரமும்

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
தொளைத்தவேல் உண்டே துணை.

யாழ்ப்பாண கலாச்சாரம் கந்தபுராண படனம் முதன்மை. மூன்று மாத காலம் கந்தபுராணம் படனம் செய்யப்பட்டு நிறைவு நாட்களில் அன்னதானமும், நிறைமணிப்பூசை நிகழ்வும் பிரசித்தம்.

கந்த சஷ்டி விரத நாட்களில், நோன்பன்று மாலை, ஸ்ரீஸ்கந்த வேல் பெருமான், தும்பளை முருகன் கோயிலிருந்து சங்கார மூர்த்தியாக தாரக சூரன் (மாயை) சிங்கமுகன் (கன்மம்), சூரன் (ஆணவம்) ஆய அசுர வதங்களுடன் நெல்லண்டை முன்றலில் அம்மையின் வேல் பெற்று, சூரசங்காரம்(மாமரம் பிளத்தல்) மற்றும் திருவருள் மூலம் மயில் வாகனம், சேவல் கொடியாக நிறைவு பெறும்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

-கந்தரநுபூதி அருணகிரிநாதர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தும்பளை கிராம ஒருமைப்பாடு

இலங்கையின் அதிவடக்கில் இந்து சமய கலாச்சார, பாரம்பரிய சூழலில், மரபுபேணி ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்றபடி, தும்பளையில் நெல்லண்டை அம்மன் நடு நாயகியாக இருக்க மற்றும் ஆலயங்கள் கணக்கிலாவத்தை சித்தி விநாயகர், இலட்ச மணன் தோட்ட பிள்ளையார், வீரமாகாளி அம்மன், தோட்டக்கடவை நரசிம்ம வைரவர், தும்பளை முத்துமாரி, தும்பளை முருகன் ஆகியன சூழ இருப்பது சிறப்பம்சம்.

கிட்டத்தட்ட 1949ஆம் ஆண்டளவில் தனிப்பட்ட நிர்வாகத்திலிருந்த நெல்லண்டை அம்மன் ஆலயம், தும்பளை கிழக்கு நெல்லண்டை குறிஞ்சி, விஸ்வகுலம் ஆகியோரின் அனுசரணையுடன் தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தருமபரிபாலன சபை என்ற அமைப்புடன் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவு மரபு வழித் தோன்றல்களே பொதுச்சபை, செயற்குழு ஆகியவற்றில் உள்ளனர்.

மேலும் தும்பளை முத்துமாரி கோயில், தும்பளை முருகன் கோயில் ஆகிய இரண்டும் சபை நிர்வாகத்திற்கு உட்பட்டு சேவைகள் தொடர்கின்றன. மேற்படி இணைப்பிற்கு அமரர் திரு. ஆ. வடிவேலர், அமரர் திரு.சி.மு கந்தசாமி ஆகியோரின் பங்களிப்பு சிறப்பானது.

எங்ஙனமாயினும் எம் மூதாதயர் தீர்க்க தரிசனமாகக் கட்டிக் காத்த, மரபு வழி ஆன்மீக வளங்களைப் பராமரித்து வருவது தலையாயபணி.

வழிபாடு - நிர்வாகம் - சமூகம் என்ற இலட்சிய நோக்கில் சபையின் கடமைகள் அடக்கமாக, திருப்பணிகளும் சீர்பெற்று வருவதையிட்டு யாவரும் மிக்க மகிழ்ச்சி.

பல்லோரும் ஏத்தப்பணிந்து
உய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்லண்டை அம்மன் பாக்கள்

### விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை.

### அம்மன் துதி

1. பூத்தாய் புவனம் பதினான்கினையும் புவியடங்கக்
காத்தாய் மனத்தையும் காதல் கொண்டாய் இந்தக் காசினிற்குள்
பாத்தாய் எனக்கினியாருண்டாம் மா பச்சை மால் துணைவி
ஆத்தாய் அருளுதி நெல்லண்டை இத்தி மாமர நிழல்மேவிய
[அம்மை நீயே.

2. இத்தி மாமர நிழல் தேவியே துயருறும்
பக்தி அடியார் நல்லருள் நல்கும் தாயே
சித்தி பெற ஏடெடுத்து புகட்டுபவளே
முத்தி ஞான ஓங்காரியே சரணம் அம்மா.

3. தும்பளை நெல்லண்டை புனித பூமியிலே உந்தன் திருவிளையாடல்
கம்பளை ஆக கூடும் அடியார் நேர்த்தியில்
பம்பரமாகச் சுழன்று உளம் களித்திடுவாய்
சிதம்பர நடேச துணைவியே சரணம் அம்மா.

4. ஐங்கரன் கழல் நினைந்து உன் நிழல் சரணம் அம்மா
சங்கரன் கழல் நினைந்து இன் நிழல் தேடும் அம்மா
பொங்கரன் தழல் நினைந்து துன் நிழல் தேடும் அம்மா
சிங்கரன் கழல் நினைந்து சின் நிழல் ஞானி அம்மா.

5. ஓரடி நிலம் தானும் சொந்த மற்ற பேதையானுக்கு
சீரடி நிலம் தானும் பந்தம் மற தருவோனுக்கு
திருவடி நிலம் ஊனாக உந்தன் கழலானுக்கு
கருவடி நிலம் தானாக அமைந்த சீமாட்டி நெல்லண்டையாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சீர் பெருகும் தும்பளையிலே நெல்லண்டை தளம் அமைய
பார்புகழ் அடியார் சூழ அருள் ஆட்சி பெருக
வல்லிபுரனார் கண் பார்த்து மாமர நிழலில் சிம்மாசனம்
துல்லியமான வினை தீர்க்க கல்லாலில் உன் தரிசனமே.

7. அனந்த சயன மாயவனின் தங்கையே
சினந்த வேந்தனின் வினா தீர்த்த அபிராமியே
புனைந்த கந்த பராண பாராயண நாயகியே
வினைந்த எம் பிறவிகள் அயரதுணை புரிவாயே.

8. ஆயமுத்துப் பந்தரில் மெல்லணை மீதுன் அருகிருந்து
நீ முத்தம் தாவென்று அவர் கொஞ்சும் வேளையில் நித்தம் நித்தம்
பேய் முத்த ரோடென் குறைகளை மெல்லச் சொல்லச் சொன்னால்
வாய் முத்தம் சிந்தி விடுமோ நெல்லண்டை அம்மணியே.

9. மங்களக் குங்குமத் தாயே!
பொங்கும் மங்களம் தருவாயே!

குங்குமத்தை அணிந்திருக்கும் தாயே என்
குறைகளைத் தீர்க்க வருவாயே!
மஞ்சனையும் கொண்டிருக்கும் தாயே இங்கு
மங்களமாய் வந்திருப்பாய் நீயே!

நெய்விளக்கு ஏற்றி வைத்தேன் தாயே - இங்கு
நித்தமென்னைக் காத்திடுவாய் - நீயே
கைவிளக்காய்த் துணையிருப்பாய் தாயே என்
கவலைகளைப் போக்கிடுவாய் நீயே!

மாலை ஒன்று கட்டி வைத்தேன் தாயே - உன்
மனதை மட்டும் எனக்கருள்வாய் நீயே
பால் பழங்கள் நான் படைத்தேன் - தாயே
அதன் பலனை எல்லாம் எனக்களிப்பாய் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடித்தேடி அலைந்திருந்தேன் தாயே - உன்
திருவருளைக் காட்டிடுவாய் நீயே
பாடி அழுது ஏங்குகிறேன் தாயே - இந்தப்
பாலன் முகம் பார்த்தருள்வாய் நீயே!

10. ### கீர்த்தனை

#### பல்லவி

தும்பளை நாயகியே! பத்திரகாளியே! யுன்
அருள்வெள்ளம் பொங்கட்டுமே.

#### அனுபல்லவி

கடலொலிக்கும் பருத்தி நகர்தனில் வீற்றிருந்து
அடியவர் துயர் தீர்க்கும் மாதா பரமேஸ்வரியே!

#### சரணம்

ஆழியின் முன்னிருந்து வல்லிபுரனை நோக்கி
ஆனைமுகனும் போற்ற கோயில் கொண்ட தாயே!
ஆணவத்தை அடக்கி ஞானத்தை நல்கிடும்
அகிலாண்ட நாயகியே! எமையாளும் இத்தி மாமர ஈஸ்வரியே!

11. ### அபிநயப்பா

"அகரமுதல எழுத்தெல்லாம் ஏடெடுத்து ஊட்டி
இகபர சுகங்கள் அருளும் நெல்லண்டை தாயே"

ஆதி வீரகத்தி விநாயகர் போற்ற வல்லிபுரனை நோக்கி
இத்தி மாமர பீட நிழலில் காட்சி தரும் அம்மையே - (அகர)

பிரதி வைகாசித் திங்கள் அருள்பாலித்து
ஓங்கார ரூபியாக காட்சி தரும் வெளிமடைத் தாயே (அகர)

பல்லோரும் அம்மா தாயே என்று அழைத்திட
உன்தன் வல்லமை அருள்வாய் தாயே. (அகர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்தாடி மகழ்வோருடன் ஊடாடி
அடியவர் சீர்பெற நல்லருளும் மாபச்சை மால் துணைவியே.
(அகர)

வேல் பாய்ச்சி காவடி பாலாபிஷேகம் சேர
உன்னடியாரை புகழோடு வைப்பாய் தாயே (அகர)

அல்லலுறும் அடியாரை தேடி ஓடி
அரியாசனம் வைத்திடும் கருணை தெய்வமே (அகர)

இளையோனின் படனத்தை கந்தபுராண
அன்ன தானமாக்கி சூழலை சிறப்பிப்பாய் தாயே
(அகர)

நவராத்திரி விஜயதசமி கூட திக் விஜயம்
விரும்பி தும்பளை நீலர்வளவு மகிழ்விக்கும் தாயே
(அகர)

மாரி முருகனையும் அரவணைத்து
சமயமுதல் பேணும் அம்மா தாயே (அகர)

பட்டர் கலங்கிட உனை நினைந்து அந்தாதி பாட
உன்தன் தாடங்கம் தோடு வீசி பூரணை ஒளிரவைத்த சீர்
அபிராமித் தாயே (அகர)

ஆணவ தகனமாய், ஞான தானமாய்
புவனம் சீர்பெறு நெல்லண்டையில் நல்லருள் தரும் தாயே.
(அகர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு அருட்பா முத்துக்கள்

### விநாயகர் துதி

1. திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்.

-கந்தபுராணம்-

### சிவசக்தி துதி

2. நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந்தாரே.

### அபிராமி துதி

3. தனந்தரும்; கல்விதரும்; ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும்; தெய்வ வடிவுந்
தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும்; நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபி
ராமி கடைக் கண்களே.

### சரஸ்வதி துதி

4. புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடை உடையாளே மூவுல குந் தொழுது ஏத்துஞ்
செப்புக் கவிந்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல் இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுவதும் எனக்கருள் செய்து என்
சித்தந் தனில் நீ இருந்து திருவருள் செய்திடு வாயே.

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறு முகம் வாழ்க வெற்பைக்
கூறுசேய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம்.

## பொது

''பாகல் படர்ந்து காய்த்தற்குப்
போட்ட பந்தல்'' போன்றது இந்த உலகம் - யோகர் சுவாமி

உவமை அதைப் பயன்படுத்திச் சுய தருமத்தை மலரச் செய்ய வேண்டும்; ஒருவன் விடுதலை பெறுவதற்கு உலக வாழ்வு ஒரு சந்தர்ப்பம் வாழ்வுக் கடமைகளைச் செய்விப்பதிலே சமயத்திற்குரிய பங்கு அதிகம். வெளகீக சுகம், ஆன்ம விடுதலை என்ற இரண்டிற்கும் வழி காட்டுவது அவரவர் சார்ந்த சமயங்களே.

''துன்பம் வருங் துளங்கான் மனநிலையும்
இன்பங்களிலாவல் இல்லோனாய்த் - தன்பால் வீண்
அச்சம் சினநதவிர்ந்த அம் முனவாய்ந் தானென்ப
நிச்சயமெஞ்ஞான நிலை''

-பகவத் கீதை வெண்பா 2-50 புலவர்மணி

வெளியீடு:
திரு. வல்லிபுரம் சிதம்பரப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா
முன்னாள் செயலாளர் (1991ஆம் ஆண்டு)
தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
தருமபரிபாலனசபை
ஆத்தியடி
பருத்தித்துறை.

நீலர்வளவு
தும்பளை
2013.01.31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V.S. SRISKANTHARAJAH
ESTIMATOR
CIVIL ENGINEERING
N.D.T (CIVIL). SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகிறது.

இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்





தமிழ்ப்பூங்கா, நெல்லியடி. - 021 2264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org